அந்தத் தண்ணீர் ஊற்றை நன்ருக ஆராய்ந்து பார்த்தோம். கொஞ்சம் ஆழம் போனவுடன் குடிக்கிற நல்ல தண்ணீர் வந்து விட்டது.

*955 கேள்வி.—திரு. பி. பழனிப் பிள்ளை : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் போளூர் தாலுக்கா அரும்ப ஊர் கிராமத்தில் இரும்பு தாதுப் பொருள் கிடைப்பது சர்க்காருக் குத் தெரியுமா ?

(இ) இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், இந்த இடம் ராஜ்ய பூகர்ப்ப ஆராய்ச்சி யாளர்களால் பரிசோதிக்கப்பட்டதில், அரும்பலூருக்கு அருகே சுமார் 4 மிலியன் டன் மட்டரக இரும்பு தாது கிடைப்பதாக மதிப் பிடப்பட்டிருக்கிறது. ஆனல் அது உருக்கு ஆலை ஏற்படுத்து வதற்குப் போதிய அளவினதாக இல்லை.

*956 கேள்வி.—திரு. எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

பெரம்பலூர் தாலூகாவில் ஒதியம் கிராமத்தின் அருகில் கிடைக்கும் ஜிப்ஸத்தை எடுக்கும் தொழிலை அரசாங்கமே எடுத்து நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir, Proposals are under consideration.

*957 கேள்வி.—திரு. சா. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

திருச்சி உடையார்பாளையம் வட்டம் ஆண்டிப்பட்டாக்காடு பஞ்சாயத்திலுள்ள சுண்டக்குடி கிராமத்தில் வெள்ளி கிடைப்பதாக வெளியான செய்தி உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

நூல் விலை

*963 கேள்வி.—திரு. சா. கணேசன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அத்தியாவசியப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி நூல் விலையை நிர்ணயித்து அதன்படி விற்க வேண்டு மென்று விதி செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) நூல் விலையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆலை அதிபர்களை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறதா ?